03.03.2021 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு கு.வி.செய்யப்பட்டது. (அ.வ.எண். 139 /2014) பி.வா.சா.2. முருகன்
<u>வாதி தரப்பில் கு.வி.</u>

வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால்_ தெரியாது. எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு என்றால் சர்வே எண்.60/7 ல். அதன் மொத்த அளவு 12 செண்டு. அதன் நான்கு மால்கள் தெரியுமா என்றால் தெரியும். வடக்கு எனது மாமா நிலம். மேற்கு சின்னராஜ் இடம், கிழக்கே எனது கையிருப்பு இடம். தெற்கே கிருஷ்ணதேவர் இடம். நான் யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் இராஜேந்திரன் என்பவரிடம் கிரையம் பெற்றேன். தாவாச்சொத்து போக வேறு சொத்தும் கிரையம் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அதன் சர்வே எண்.60/6 ல். இராஜேந்திரன் யாரிடம் கிரையம் பெற்றார் என்றால் நாராயணன் மகன் சீனிவாசன் என்பவரிடம் கிரையம் 1990 ல் பெற்றார். நான் 1995 ல் கிரையம் பெற்றேன். நாராயணசாமி நாயக்கரின் குடும்பத்தில் யார் யாருடன் பாகம் செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் 1976 ஆம் ஆண்டு நாராணசாமி நாயக்கரின் வாரிசுகளான மூக்கம்மாள், கிருஷ்ணவேணி, சீனிவாசன், இராமானுஜம், ஆகியோர்கள் பாகம் செய்து கொண்டார்கள். நாராயணசாமி நாயக்கரின் அப்பா பெயர் என்றால் தெரியாது. அவர்களின் குடும்ப பெயர் தெரியுமா என்றால் தெரியாது. தபசில் சொத்து ஆதியில் நாரணப்ப நாயக்கருக்கு பாத்தியம் என்றால் அவர் யார் என் தெரியாது. நாராணப்ப நாயக்கருக்கு, அய்யப்ப நாயக்கர், வெங்கட்ராம நாயக்கர், சுப்பா நாயக்கர், ஆகியோர்கள் வாரிசுகள் என்றாலும் அய்யப்ப நாயக்கர் மகன் பெயர் நாராணசாமி நாயக்கர் என்றாலும் அது பற்றி எனக்குத்தெரியாது. ஷை நாராயணசாமி நாயக்கர் பெயரில் பட்டா இருந்தது என்றாலும், எனக்கு கிரையம் கொடுத்த சீனிவாசன் தகப்பனார் பெயர் நாராயணசாமி என்ற பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி நாராயணசாமி நாயக்கர் தனது குடும்பத்திற்குள் 1976 ஆம் ஆண்டு மோசடியாக பாகப்பிரிவினை செய்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த பாகப்பிரிவினை ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றால் சரியல்ல. அந்த பாகபிரிவினையின் அடிப்படையில் செல்லையா ராஜேந்திரனுக்கு கொடுத்த கிரையமும், அதன் அடிப்படையில் எனக்கு ராஜேந்திரன் எனக்கு கொடுத்த கிரையமும் சட்டப்படி செல்லத்தக்கதில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாச்சொத்து நாராயணசாமி நாயக்கர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றாலும் அதற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எனவே வாதியின் வழக்கு செல்லத்தக்கதில்லை என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரிஎன ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வே.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
03.03.2021.